**மாகாணக் கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்**

# பயிற்சிப் பரீட்சை 2020

| தரம் –13 | நாடகமும் அரங்கியலும் -I -58-T-I | நேரம் - 3 மணித்தியாலம் |
|---|---|---|

**கவனிக்க:-**

(i) *எல்லா வினாக்களிற்கும் விடை எழுதுக.*

(ii) *1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.*

## பகுதி I

1. "ஒரு சமூகத்தில் நாடகமென்பது அம்மக்களது வாழ்க்கை முறைகளால் எழுந்த கருத்துக்களினதும் அவர்கள் வாழும் சூழலால் வருகின்ற ஆற்றுகை முறைளினதும் தொகுப்பாகும்" எனக் கூறியவர்
   (1) பேர்னாட்சா
   (2) அரிஸ்ரோட்டல்
   (3) க. சிவத்தம்பி
   (4) அபிநவகுப்தர்
   (5) குழந்தை. மு.சண்முகலிங்கம்
2. "வட்டக்களரி" அரங்கில் சபையோர் அமர்ந்திருப்பது
   (1) முன் பக்கமாக
   (2) சுற்றிவர
   (3) பின் புறமாக
   (4) நடுவில்
   (5) பக்கவாட்டில்
3. பின்வருவனவற்றுள் லேக தர்மி பற்றிய பிழையான கூற்று எது?
   (1) லலித அங்க அசைவுகள் அற்றது
   (2) பாத்திரங்களின் இயல்பான நடத்தையைக் காட்டுவது
   (3) இயல்பான அபிநயங்களைக் கொண்டது
   (4) பாத்திரங்கள் அபிநயங்களையும் அசைவுகளையும் குறியீடுகளால் சித்திரித்துக் காட்டுவது
   (5) ஒரு பாத்திரத்தை ஒரு நடிகரே நடிப்பது
4. கப்புகனார் வேடந்தாங்குவது
   (1) சூரன் போரில் (2) பாண்டவர் வனவாசத்தில் (3) வேட்டைத்திருவிழாவில் (4) குளுர்த்தியில் (5) பாஸ்குவில்
5. தொல்காப்பியம் குறிப்பிடும் மெய்ப்பாடுகளின் எண்ணிக்கை
   (1) 07 (2) 08 (3) 09 (4) 10 (5) 12
6. பின்வருவனவற்றுள் பாண்டவர் வனவாசத்துடன் தொடர்பற்ற கூற்று எது?
   (1) மட்டக்களப்பில் பிரதானமாக நிகழ்வது

(2) திரௌபதை அம்மன் வழிபாட்டுடன் தொடர்புடையது

(3) திருவிழாவின் 16 ஆம் நாள் நிகழ்த்தப்படும்

(4) பாண்டவரும் திரௌபதையும் வனவாசம் செல்லும் காட்சி அபிநயத்துக் காட்டப்படுவதைக் குறிப்பது

(5) வாழ் மாற்றுச் சந்தியில் வீமன் வனவாசப் பொறுப்பை ஏற்பார்

7. பின்வருவனவற்றள் புகழ் பெற்ற‘‘பலே’’ ஆற்றுகை எது?

(1) காட்டு வாத்து

(2) கடல் வாத்து

(3) அன்னப் பாட்டு

(4) அன்னத் தடாகம்

(5) கரடி

8. நூர்த்தி நாடக மரபின் பொற்காலமென வர்ணிக்கப்படும் காலம்.

(1) கி.பி 1910- கி.பி 1940

(2) கி.பி 1920- கி.பி 1930

(3) கி.பி 1930- கி.பி 1950

(4) கி.பி 1810- கி.பி 1840

(5) கி.பி 1870- கி.பி 1910

9. கடவுனு பொரந்துவ எவ்வகை நாடகம்?

(1) கோலம்

(2) நாடகம

(3) நூர்த்தி

(4) டீட்டர்

(5) மினர்வா

10. யதார்த்த நாடகங்களின் பண்பாக அமையாதது

(1) உள்ளதை உள்ளவாறு காட்டுதல்

(2) வாழ்க்கையை தத்ரூபமாக எடுத்துக் காட்டுதல்

(3) இயற்கையின் அழகு காதலின் சிறப்பு, மனிதத்தன்மையின் சிறப்பு என்பவற்றை மனிதருள் கிளறச் செய்தல்

(4) பார்ப்போரை நான்காவது சுவராகக் கொண்டிருத்தல்

(5) காரண காரியத் தொடர்பு காணப்படும்

11. கிரேக்கத்தில் எழுதப்பெற்ற ‘‘அவல மகிழ்நெறி’’ நாடகம்

(1) குளோப்பஸ்
(2) றக்கேஸ்
(3) அகமெம்னன்
(4) ஈடிப்பஸ் அற்கொலோனஸ்
(5) அல்செல்ஸ்ரா

12. கிரேக்க நாடக வரலாற்றில புதிய மகிழ்நெறி நாடகங்களை எழுதிப்புகழ் பெற்றவர்

(1) புளோட்டஸ்
(2) செனேக்கா
(3) மெனாண்டர்
(4) அரிஸ்ரோ பேன்ஸ்
(5) யூறிப்பிடிஸ்

13. அதலபாதாளம், பொம்மலாட்டம், அவளைக் கொன்றவன் நீ போன்ற நாடகங்களை எழுதியவா்

(1) இ. சிவானந்தன் (2) சி. மௌனகுரு (3) சுஹைர் கமீத்

(4) பௌசுல் அமீா் (5) அ.தாசீசியஸ்

14. சட்டியும் குட்டியும், நாய்க்குட்டி ஊா்வலம் போன்ற நாடகங்களை எழுதியவா்

(1) இளைய பத்மநாதன் (3) மாவை நித்தியானந்தன் (4) வீ.எம் குகராஜா

(2) க. பாலேந்திரா (5) ஏ.ஜே கனகரட்னா

15. கந்தன் கருணை நாடகத்தை முதன் முதலாகத் தயாரித்த அரங்க நிறுவனம்

(1) நெல்லியடி அம்பலத்தாடிகள் குழு

(2) மட்டக்களப்பு நாடக சபா

(3) கூத்தாடிகள் குழு

(4) எங்கள் குழு

(5) செயற்றிறன் அரங்க இயக்கம்

16. மானிடம் சுடரும் ஓர் விடுதலை எவ்வகை நாடகம்

(1) தெருக்கூத்து

(2) நவீன நாடகம்

(3) அரசியல் நாடகம்

(4) வீதி நாடகம்

(5) சிறுவர் நாடகம்

17. பள்ளு, குறவஞ்சி, நொண்டி தோற்றம்பெற்ற காலப்பகுதி

(1) கி.பி 600 இற்கு முன் (4) கி.பி 1800 –கி.பி1947

(2) கி.பி 600 –கி.பி1300 (5) கி.பி 1947 இற்கு பின்

(3) கி.பி 1300 –கி.பி1800

18. கோலம், செக்கரி, நாடகம போன்ற நாடகங்களை தமிழ்க் கலைகளோடு ஒப்பிடப்படும் விதமானது முறையே,

(1) கழிப்புச்சடங்கு, மகிடி, இசைநாடகம்

(2) கூத்து, இசைநாடகம், மகிடி

(3) வசந்தன் கூத்து, மகிடி, கூத்து

(4) மகிடி, கூத்து, இசைநாடகம்

(5) கழிப்புச் சடங்கு, மகிடி, கூத்து

19. "ஈடிப்பஸ் மன்னன் என்ற நாடகத்தின் இறுதியில் ஈடிப்பஸ்

(1) கண்களைக் குத்திக் குருடாக்கிக் கொள்கிறான்

(2) சித்தறொன் மலையில் அடிபட்டுச் சாகிறான்

(3) கொரிந் வாசியால் கொலை செய்யப்படுகிறான்

(4) கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொள்கிறான்

(5) தன்னைத்தானே குத்திக் கொண்டு சாகிறான்

20. சமஸ்கிருத நாடக மரபில் "நாடிகா" நாடக வகையைச் சார்ந்த நாடகம்?

(1) ஸ்வப்னவாசவத்த (2) வச்ரசூச்சி (3) சூத்திரலங்கார

(4) பிரியதர்சிகை (5) மிருச்சகடிகம்

21. சமஸ்கிருத அரங்கப் பகுதிகளில் ஒன்றான "ரங்கசிரஸ்" குறிப்பது

(1) ஒப்பனை அறையை ஆகும் (4) பிரதான மேடையை ஆகும்

(2) பார்ப்போர் நாடக கூடத்தை ஆகும் (5) இசைக் கலைஞர் அமரும் பகுதி ஆகும்

(3) அரங்கப் பொருள்களை ஆகும்

22. யப்பானிய நாடக மரபில் வணக்கத்திற்குரிய நாடக வடிவம் எது?

(1) நோ (2) கபுக்கி (3) கிஜோஜென் (4) கோவாகா (5) புன்ரகு

23. சமஸ்கிருத நாடகத்தலைவனின் முயற்சி வெற்றிபெற தனக்குப் பயனேதுமின்றி வேறு ஒருவன் துணை புரிவதைக் குறிக்கும் சொல்

(1) பிரகரி (2) பிந்து (3) பதாக (4) காரிய (5) பிஜ

24. கொஹொம்பஹங்காரிய எனும் சாந்தி சடங்கின் பிரதான நோக்கம்

(1) நோய் தரும் பேய்களை விரட்டுதலாகும் (4) சிறந்த கணவரைப் பெறுதலாகும்

(2) மழை வளம் வேண்டுதலாகும் (5) ஊருக்கு /கிராமத்திற்கு/நாட்டிற்கு நன்மை வேண்டி

(3) குழந்தை வரம் வேண்டுதலாகும்

25. சிங்கள மக்களின் "கோலம்" சடங்கு நடைபெறுவது

(1) அநுராதபுரப் பிரதேசத்திலாகும் (4) ருகுணு பிரதேசத்திலாகும்

(2) பொலனறுவைப் பிரதேசத்திலாகும் (5) அம்பலாங்கொட பிரதேசத்திலாகும்

(3) உடுநுவர பிரதேசத்திலாகும்

26. முகுது புத்து எனும் நாடகத்தை தயாரித்தவர்

(1) பராக்கிரம நிரியெல்ல (4) பேராசிரியர் லுடோவைக்

(2) பேராசிரியர் சீ.டபிள்யூ. அமரசிங்க (5) கலாநிதி மல்லசேகர

(3) குணசேன கலபத

27. கடல் வாத்து எனும் நாடகத்தின் மூலப்பிரதியை ருஸ்ஸிய மொழியில் எழுதிய நாடகாசிரியர்

(1) டெனஸி வில்லியம்ஸ் (3) பேட்டல் பிர.்.ட் (4) ஸ்ரனிஸ்சிலவஸ்கி

(2) அன்ரன் செக்கோவ் (5) மேயர்கோல்ட்

28. யதார்த்த நாடக மோடியின் முன்னோடியான இப்சனுடைய பிறந்த இடம்

(1) ஜேர்மனி ஆகும் (3) பிரான்சு ஆகும் (4) ஸ்கொட்லாந்து ஆகும்

(2) ரஷ்யா ஆகும் (5) நோர்வே ஆகும்

29. மாதவி ஆடிய பதினொரு ஆடல்களின் அரங்கு எவ்வடிவத்தைக் கொண்டது

(1) சதுஸ்ர அரங்கு (2) தெருவெளி அரங்கு (3) திரியஸ்ர அரங்கு

(4) படச்சட்ட மேடை (5) வட்டக்களரி

30. ஒரு குழு இன்னொரு குழுவை மந்திர தந்திரங்களால் மயக்கும் கருவை அடிப்படையாகக் கொண்ட நாடக வடிவங்கள்

(1) பறைமேளக்கூத்து, மகிடி (3) நாட்டைக்கூத்து, வசந்தன் கூத்து

(2) காத்தவராயன் கூத்து, நாட்டைக்கூத்து

(2) வசந்தன் கூத்து, பறைமேளக்கூத்து, (5) மகிடிக் கூத்து, வசந்தன் கூத்து

31. பின்வரும் பாத்திரங்களுள் காத்தவராயன் கூத்தில் ஹாஸ்யப் பாத்திரம்

(1) தொட்டியத்துச் சின்னான் (3) டாப்பர் மாமா

(2) வல்லத்து மங்காளி (4) வளையற்செட்டி (5) கிருஸ்ணர்

32. "மதங்க சூழாமணி" எனும் நூலை எழுதியவர்

(1) சுவாமி விபுலானந்தர் (4) நடிகமணி வி.வி வைரமுத்து

(2) பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை (5) கலைப்பேரரசு ஏ.ரி பொன்னுத்துரை

(3) கலையரசு சொர்ணலிங்கம்

33. பிரான்சின் மகிழ்நெறி நாடகங்களை எழுதியவர்

(1) மோலியர் (3) எமிலிசோலா (4) புளோட்டஸ்

(2) மொனாண்டர் (5) ரெரன்ஸ்

34. காமன் கூத்தின் மூலக்கதை

(1) இராமணயத்தில் உள்ளது (4) மகாபாரதத்திலுள்ளது

(2) கந்தபுராணத்தில் உள்ளது (5) மகாபுராணத்திலுள்ளது

(3) பாகவதத்தில் உள்ளது

35. சேக்ஸ்பியர் நாடகங்கள் பெரும்பாலும் எத்தனை அங்கங்களைக் கொண்டது

(1) 4 (2) 5 (3) 6 (4) 7 (5) 8

36. "பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம்" என்ற நூலின் ஆசிரியர்

(1) காரை சுந்தரம்பிள்ளை (3) கா. சிவத்தம்பி (4) இ. சிவானந்தன்

(2) சொக்கன் (5) இ. முருகையன்

37. செவ்விழக்கு எனும் சீன நாடகத்தை இலங்கையில் தயாரித்தவர்

(1) தயானந்த குணவர்த்தன (3) சிதம்பரநாதன் (5) தர்மஸ்ரீ பண்டாரநாயக்க

(2) தாசீசியஸ் (4) பராக்கிரம நிரியல்ல

38. பின்வரும் அரங்க நிறுவனங்களில் காலத்தால் பிந்தியது

(1) செயல் திறன் அரங்க இயக்கம் (4) திருமறைக் கலாமன்றம்

(2) அரங்கச் செயற்பாட்டுக் குழு (5) அரங்க ஆய்வு கூடம்

(3) நாடக அரங்கக் கல்லூரி

39. C. N அண்ணாத்துரை எழுதிய நாடகம் அல்லாதது

(1) பாவையின் பயணம் (3) வேலைக்காரி (4) ஒரேமுத்தம்

(2) காதல் ஜோதி (5) நல்லதம்பி

40



மேலுள்ள நாடகவியலாளர்

(1) ஸ்ரனிஸ்சிலவஸ்கி (3) மேயர்கோல்ட் (5) சேக்ஸ்பியர்

(2) அன்ரன்செக்கோவ் (4) ஆதர்மில்லர்

# பகுதி-ii

**கவனிக்க:-**
உப பகுதி A இலிருந்து இரண்டு வினாக்களையும் உப பகுதி B இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து, நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக

### உப பகுதி A

1.

'சடங்கில் இருந்தே நாடகம் தோன்றியது என்ற கூற்று இன்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது'

1. சடங்கு என்றால் என்ன என்பதனை உதாரணத்துடன் குறிப்பிடுக. (5 புள்ளி)
2. சடங்கில் இருந்து நாடகம் தோன்றிய முறையினை விளக்குக. (5 புள்ளி)
3. நவீன அரங்குகளில் சடங்கின் செல்வாக்கினை குறிப்பிட்டு விளக்குக (5 புள்ளி)

2. 1. நாடகம் என்றால் என்ன? (5 புள்ளி)
2. நாடகத்தின் மூலகங்களைக் குறிப்பிடுக. (5 புள்ளி)
3. நாடக மூலக் கூறுகளின் முக்கியத்துவத்தினை விளக்குக (5 புள்ளி)

3 நாட்டிய சாஸ்திரம் ரசக் கோட்பாடு மூலம் ரசிகர்களின் உணர்சு நிலை பற்றிக் கூறுகின்றது.
1. ரசம் என்றால் என்ன? (5 புள்ளி)
2. அதன் வகைகள் எவை? (5 புள்ளி)
3. ரசம் தோன்றும் முறையை அபிக்ஞான சாகுந்கலம் நாடகத்தினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (5 புள்ளி)

### உப பகுதி B

4)நாடகத்தின் தோற்றுவாய்க்கு கிரேக்கம் அடிப்படையாய் அமைந்துள்ளது.
1. கிரேக்க திறஜெடி நாடகங்கள் தோன்றிய முறையை விளக்குக. (5 புள்ளி)
2. திறஜெடியின் அடிப்படை இலட்சணங்கள் 6 இனையும் கூறி விளக்குக. (5 புள்ளி)
3. அரிஸ்ரோட்டில் குறிப்பிடும் மும்மைக் கோட்பாட்டினை விளக்குக. (5 புள்ளி)

5)பின்வரும் வாதங்கள் பற்றி விளக்கமளிக்குக.
1. யதார்த்த வாதம்
2. மிகைப்பாட்டு வாதம்
3. நவவேட்கை வாதம் (3x5=15 புள்ளி)

6)பின்வருவனவற்றுள் எவையேனும 3 இற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1.கபுக்கி

2.மறைஞான நாடகங்கள்

3.சீன அரங்கு

4.எதிரிவீர சரச்சந்திரா

5.பேரா சு.வித்தியானந்தன் (3x5=15 புள்ளி)